# பெரியார் பல்கலைக்கழகம்

**சேலம் – 636 011**

**24–ஆவது பட்டமளிப்பு விழா–2025**

## செய்திக்குறிப்பு

பெரியார் பல்கலைக்கழக இருபத்தி நான்காவது பட்டமளிப்பு விழா 2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளது. நவம்பர் 2024 மற்றும் ஏப்ரல் 2025 பருவங்களில் நடைபெற்ற தேர்வுகளில் தேர்ச்சிப் பெற்றுப் பட்டம் பெறுவதற்குத் தகுதியான இளநிலை/முதுநிலை/ஆய்வியல் நிறைஞர்/பட்டயம்/சான்றிதழ்ப் படிப்பு மாணாக்கர்களும், பெரியார் பல்கலைக்கழக இணையவழி மற்றும் தொலைநிலைக் கல்வி மைய (CDOE) மாணாக்கர்களும் அவர்களுக்குரிய பட்டச்சான்றிதழ் விண்ணப்பங்களை www.periyaruniversity.ac.in என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து உரிய கட்டணம் மற்றும் இணைப்புகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினைத் தாங்கள் பயின்ற கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாணாக்கர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினைக் கல்லூரி முதல்வர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் **"தேர்வாணையர், பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – 636 011"** என்ற அலுவலக முகவரிக்கு 04.12.2025 ஆம் நாளுக்குள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. பட்டச் சான்றிதழுக்கு ஏற்கனவே கட்டணம் செலுத்தியுள்ள மாணாக்கர்கள் தனியாக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**"முனைவர் பட்டம்"** பெறுவதற்குத் தகுதி பெற்ற மாணாக்கர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் முனைவர் பட்டத்திற்கெனத் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து அதனைப் பூர்த்தி செய்து உரிய இணைப்புகளுடன் **"தேர்வாணையர், பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – 636 011"** என்ற முகவரிக்கு 04.12.2025 ஆம் நாளுக்குள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஏப்ரல் 2025 பருவத்திற்கான பல்கலைக்கழகத் தேர்வில் முதல்தரத்தில் தேர்ச்சிப் பெற்ற மாணாக்கர்கள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினைத் தாங்கள் பயின்ற கல்லூரி வாயிலாக முதல்வர் அல்லது நிறுவனத் தலைவரின் மேலொப்பம் பெற்றுத் **"தேர்வாணையர், பெரியார் பல்கலைக்கழகம் சேலம் – 636 011"** என்ற முகவரிக்கு 04.12.2025 ஆம் நாளுக்குள் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.